# நாடு முழுவதும் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளது இலங்கை மின்சார சபை

கொழும்பு, ஜூன் 15

இலங்கை மின்சார சபையை தனியார் வெளி நாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் அரசாங் கத்தின் தீர்மானத்திற்கு எதிராக, நாடு முழுவதும் பாரிய தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அனுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலா ளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதிய சட்டமூலங்களைக் கொண்டு வந்து மின்சார சபையைத் தனியார் வெளி நாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான அனைத்துத் திட்டங்களையும் அரசாங்கம் ஏற்கனவே தயார் செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் புதிய சட்டமொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு தயாராகியுள்ளதாகவும் புதிய சட்டத்தின் உள்ளடக்கம் குறித்து எழுத்து மூலமான அறிக் கையை வெளியிடவில்லை எனவும் அவர் தெரிவித் தார்.

3,800 க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற ஊழியர் களை பெரும் செலவில் பணி நீக்கம் செய்ய வேண் டியிருக்கும் என்றும், மின்சார வாரியத்தை வாங்கும் 15 நிறுவனங்களின் சுமை மின்சார நுகர்வோர் மீது சுமத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தினால் நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சி கள் நடத்தப்பட்டு வருவதாகவும், விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று அனுராதபுரம் நகரிலுள்ள வடமத்திய மாகாண பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத் திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை மின்சார சபை தொடர்பில் அரசாங்கம் கொண்டு வந்துள்ள அழிவுச் சட்டமூலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்சார் நடவடிக் கைகள் இம்மாதம் 21ஆம் திகதி விகாரமஹாதேவி திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ள மாபெரும் மாநாட்டின் போது நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


# மாலைக்கதிர்
Maalaikkathir


சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 01 | வியாழக்கிழமை 15.06.2023 | கதிர் 04



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# ‘மொட்டு’ முரண்டு பிடித்தால் நாடாளுமன்றம் கலையுமாம்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியை முன்னெடுப்பதற்குச் சிக்கல் ஏற்படுத்தினால் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வது தொடர்பில் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க பரிசீலித்து வருகின்றார் எனத் தெரியவருகின்றது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காமினி லொக்குகே, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன உள்ளிட்ட தமது கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச் சுப் பதவிகளை வழங்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதி பதிக்கு அழுத்தம் பிரயோகித்து வருகின் றது. மொட்டுக் கட்சியின் இந்த நகர்வால் ஜனாதிபதி அதிருப்தி அடைந்துள்ளார்.

தான் அழைத்த கூட்டத்தை மொட்டுக் கட்சியின் மாவட்டத் தலைவர்களைப் புறக் கணித்தமை தொடர்பாகவும் ஜனாதிபதி கடும் கோபத்தில் உள்ளார் என்று தெரிய வருகின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துக்கு மொட்டுக் கட்சியால் சவால் விடுக்கப்படும் பட்சத்தில், நாடாளுமன்றத் தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

# ரணிலுக்கு வெட்கக்கேடு தேர்தலை உடன் நடத்துக!

## சஜித் வலியுறுத்து



மக்கள் ஆணை உள்ள அரசை நிறுவ வேண்டுமெனில் நாடாளு மன்றத்தை ஜனாதிபதி உடனடி யாகக் கலைத்துத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "ரணில் - மொட்டு உறவு சிதைவடைந்து விட்டது. அதனால், அவர்கள் தலை மையிலான அரசும் செயலிழந்து விட்டது.

ஏற்கனவே மக்கள் ஆணையை இந்த அரசு இழந்துள்ள நிலை யில், செத்த பிணமாகவே ஆட்சி தொடர்ந்தது. அதுவும் இப்போது முடிவுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவை மொட்டுக் கட்சியினர் சிறிதளவும் மதிக்கின்றார்கள் இல்லை. அதனால்தான் அவர் தலைமையிலான கூட்டத்தை மொட்டின் உறுப்பினர்கள் புறக்கணிக் கின்றார்கள். இது ஜனாதிபதிக்கு வெட்கக்கேடு.

எனவே, மக்கள் ஆணை உள்ள அரசை நிறுவ வேண்டுமெனில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாகக் கலைத்துத் தேர்தலை நடத்த வேண்டும்." - என்றார்.

# மீண்டும் உயர்ந்தது அமெரிக்க டொலர்



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி இன்று வெளியிட்ட நாணய மாற்று விகி தங்களின்படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 311.60 ரூபாவா- கவும், விற்பனை விலை 328.92 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது.

இதேவேளை, இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள் இன்று காலை வெளியிட்டுள்ள வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றின் கொள் முதல் விலை 315 ரூபாவாகவும் விற் பனை விலை 335 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது.

# இலங்கையில் ரஷ்யாவின் அணுமின் திட்டம்! சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஆராய்கிறது

இலங்கையில் அணுமின் நிலை யம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ரஷ்யாவின் திட்டம் தொடர்பில் சர்வ தேச அணுசக்தி நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்தத் திட்டமானது, நாட்டின் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டு தற்போது சர்வதேச அணுசக்தி நிறு வன நிபுணர்களால் ஆய்வு செய்யப் பட்டு வருவதாக ரஷ்யாவுக்கான இலங் கைத் தூதுவர் ஜனிதா லியனகே தெரி வித்துள்ளார்.

அணுமின் நிலையத்தை மிதக்க வைப்பதா, அல்லது நிலத்தில் நிர் மாணிப்பதா? என்பது தொடர்பான விவாதம் தற்போது இடம்பெற்று வருகிறது எனவும் அவர் தெரிவித் துள்ளார். இலங்கையில் நிலவும் எரிசக்திப் பற்றாக்குறைப் பிரச்சி னையை அணுசக்தியால் மட்டுமே தீர்க்க முடியும் எனவும் ரஷ்யத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த அணு மின்



சார உற்பத்தி நிலையத்தின் திறன் 300 மெகாவோட்டாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அணுமின் நிலையங்களில் பணி புரியும் நிபுணர்களுக்கான பயிற்சி களை ரஷ்யாவின், ரஷ்ய அரச அணு சக்தி கூட்டுத்தாபனமான ரொசடொம் வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மருதங்கேணி விவகாரம் தொடர்பில்

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயற்பாட்டாளர்கள் மூவர் கைது



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் மூவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகர், மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன் ஆகியோர் கிளிநொச்சி பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்., வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி யில் பொலிஸாருடன் இடம்பெற்ற முரண்பாடு தொடர்பில் இன்று விசாரணைக்காகக் கி- ளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைக் கப்பட்டு வாக்குமூலம் பெற்ற பின்னர் இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கை ரூபா வீழ்ச்சிக்கான காரணம் விளக்கினார் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையே இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணம் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மக்களைப் பயப்பட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ள இராஜாங்க அமைச்சர், இலங்கை மத்திய வங்கி நிலைமையைச் சரிப்படுத்துவதற்கு பாடுபடும் என உறுதியளித்தார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், கொள்வனவு விலை 311.60 ரூபாவாகவும், விற்பனை விலை 328.92 ரூபாவாகவும் காணப்படுகின்றது. இதற்கிடையில், இன்று காலை உரிமம் பெற்ற வணிக வங்கிகளில், அமெரிக்க டொலரின் விற்பனை விலை உயர்ந்து 335.00 ரூபாவாகவும், கொள்வனவு விலை 315.00 ரூபாவாகவும் காணப்பட்டது.

இது தொடர்பில் மேலும் பேசிய இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, வழங்கல் மற்றும் தேவையின் அடிப்படையிலேயே நாணய மாற்று விகிதங்கள் தீர்மானிக்கப்படுவதாக விளக்கினார்.

இது தொடர்பில் கவலை கொள்ளத்தேவையில்லை எனத் தெரிவித்த அவர், இலங்கை மத்திய வங்கி ஏற்கனவே 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வாங்கியுள்ளது எனவும், அதனால்தான் மாற்று விகிதங்கள் அவற்றின் தற்போதைய நிலையில் உள்ளன எனவும், இல்லையெனில் அமெரிக்க டொலரின் பெறுமதி மேலும் உயர்ந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

# வவுனியா வீரபுரம் தமிழர் காணிகள் பெரும்பான்மையினரால் அபகரிப்பு

வவுனியா, வீரபுரம் பகுதியில் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய 250 ஏக்கர் காணி, பெரும்பான்மையின மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றம் சாட்டியுள்ளார். வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போதே குறித்த குற்றச்சாட்டை அவர் முன்வைத்திருந்தார்.

1994 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, வாழ்வாதாரத்திற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஓர் ஏக்கர் வழங்குவதாகக் கூறி குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால், தற்போது வரை அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை.

இதேவேளை, ஒதுக்கப்பட்ட காணிகளில் 75 சதவீதமான காணிகள், வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பெரும்பான்மையின மக்கள் அபகரித்திருக்கின்றார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, மதுராகநகரை சேர்ந்த பொது மக்கள் தெற்கு சிங்கள பிரிவிற்குள் சென்று குடியேறுவதற்காக சிறு துண்டு காணியைக் கேட்டபோது, அதற்கு அந்தப் பகுதியில் உள்ள பௌத்த மதகுரு சம்மதித்தால்தான் இவர்கள் தமது பிரிவிற்குள் வரமுடியும் என்று மாவட்டச் செயலகத்தில் அன்று பதில் வழங்கப்பட்டது.

ஆனால், தற்போது 250 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை தெற்கில் இருக்கும் பெரும்பான்மையினர் அபகரித்திருக்கின்றார்கள். எனவே, வீரபுரம் மக்களுக்கு உரிய காணிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# 15 பில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் இன்று அழிப்பு!

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 15 பில்லியன் ரூபா பெறுமதியான 200 மில்லியன் சிகரெட்டுகள் இன்று அழிக்கப்படுள்ளன.

2021 ஆம் ஆண்டு இந்த சிகரெட் தொகை 21 கொள்கலன்களில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது. இது இலங்கை வரலாற்றில் இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை புகையிலை கூட்டுத்தாபனத்தால் கைப்பற்றப்பட்ட மிகப் பெரிய சட்டவிரோத சிகரெட் தொகையென கருதப்படுகிறது.

உள்ளூர் ஏற்றுமதியாளர் ஒருவர் துபாயில் வசிக்கும் இலங்கையர் ஒருவரின் ஊடாக சட்டவிரோதமாக இந்த சிகரெட்டுக்களை இறக்குமதி செய்திருந்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் நோனிஸ் ஆகியோரின் மேற்பார்வையில் இன்று காலை முத்துராஜவெலவில் அமைந்துள்ள கழிவு சக்தி அனல் மின் நிலையத்தில் இந்த சிகரெட்டுகள் அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையால் அரசாங்கத்திற்கு 13 பில்லியன் ரூபா சேமிக்கப்பட்டமைக்கு சுங்கத் திணைக்களத்தினருக்கு இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நன்றி தெரிவித்தார்.

இவற்றை யாரும் விற்க முடியாதா? என கேள்வி எழுப்பலாம். இவற்றை விற்க முடியாது. இவற்றின் தரத்திற்கு எந்தப் பொறுப்பும் கூறமுடியாது. சிகரெட்கள் முற்றிலும் நிறம் மாறிவிட்டன. இதனால், குறித்த சிகரெட் தொகையை இன்று அழிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டோம், எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார்.

# இலங்கை - இந்தியா கப்பல் சேவை 17 ஆம் திகதி முனையம் திறப்பு

இலங்கை, இந்தியாவிற்கிடையிலான கப்பல் சேவை மிக விரைவில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 17 ஆம் திகதி முதலாவது பரீட்சார்த்தக் கப்பல் இந்தியாவிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து ஒரு தொகுதிப் பயணிகளுடன் காங்கேசன் துறைமுகத்தை குறித்த கப்பல் வந்தடையவுள்ளது. குறித்த கப்பலை வரவேற்பதற்கு துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழு யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுகிறது.

துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் தங்குமிடம், குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டுப் பிரிவு உள்ளிட்டவற்றின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், இவற்றை உள்ளடக்கிய பயணிகள் முனையத்தை அமைச்சர் திறந்துவைக்கவுள்ளார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை, காங்கேசன்துறைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இதன் முதற்கட்டமாக இந்த பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமூகச் சிந்தனையோடு அதிகாரிகள் செயற்பட வேண்டும்! ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கான பயனாளர்களைத் தெரிவு செய்கின்ற போதும், எமது மக்களின் நலன்கள் சார்ந்த சமூகச் சிந்தனையோடு அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக இன்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஆராய்ந்தபோதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, விரிவாக ஆராய்ந்து தீர்வு காணும் நோக்கில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் போக்குவரத்து, விவசாயம், கால்நடை, குடிநீர் விநியோகம், கடற்றொழில் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

குறிப்பாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான கடல் பாதை பழுதடைந்து இருப்பதனால், அதனைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில், தனியார் படகுகளை வாடகைக்கு அமர்த்தி பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த சேவை இடம்பெறுவதை உறுதிப் படுத்துமாறு பிரதேச செயலாளரையும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று, பிரதேசத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் உணவகங்களை திடீர் சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கிலே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, தீவகங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டணங்களை மீளாய்வு செய்தல், குடிநீர் விநியோகத்தினை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களும் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன், ஏனைய விடயங்களை மிக விரைவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# பிரச்சினையின் கதாநாயகர் விதுர விக்ரமநாயக்கவை உடனடியாக பதவி விலக்க வேண்டும்: சாணக்கியன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இதுவரை இனவாதி அமைச்சர் விதுர விக்ரமசிங்கவை ஏன் கண்டிக்கவில்லை? என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பியுள்ளார்.

கலாசார மற்றும் பௌத்த விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உடனடியாகப் பதவி விலகவேண்டும், எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குறுந்தூர் மலையிலே பௌதத் விகாரைக் கட்டுமானங்களை நிறுத்துமாறு நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த போதும், இரகசியமான முறையில் விகாரையை அமைத்து அதற்கான பூசை வழிபாடுகளுக்கு இராணுவப் பட்டாளத்துடன் சென்ற விதுர விக்ரமநாயக்கவே அந்தப் பிரச்சினையின் கதாநாயகர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கூட்டத்திலே தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்டத்திலே தொல்பொருள் திணைக்களம் சுவீகரித்த காணிகளை மீண்டும் விடுவிப்பதற்கான கடிதத்தினை மீளப்பெற்றதோடு, இன்னுமொரு கடிதம் அனுப்ப முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

அதன்போது, அந்தக் கடிதத்தினை அனுப்ப முடியாது விடில் உங்களுடைய ராஜினாமாக் கடிதத்தினை வழங்குங்கள், என ஜனாதிபதி கேட்டுக்கொண்டதுடன், வரலாறு தொடர்பாக வகுப்பு ஒன்றையும் எடுத்திருந்தார் எனவும் சாணக்கியன் கூறியுள்ளார்.

எனவே, இவை அனைத்திற்கும் பொறுப்பானவர் மிகவும் இனத்துவேஷம் பிடித்த முன்னாள் பிரதமர் ரட்ண சிறீ விக்ரமநாயக்கவின் மகன் விதுர விக்ரமநாயக்கவே! ஆகவே, அவருக்கு எதிராகவே முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பணிப்பாளரை இவ்வாறாக அச்சுறுத்துவதை விட அவரை இவ்வளவு காலமும் தவறான பாதையிலே வழிநடத்தி அவருக்குப் பின்னால் நின்ற விதுர விக்கிரமநாயக்கவை இந்தக் கூட்டத்திற்கு அழைத்து விளக்கம் கேட்க வேண்டும் என்று தான் அந்த இடத்திலே கூறியதாகவும் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, மட்டக்களப்பு மாவட்ட மலைக்கு விதுர விக்ரமநாயக்க சென்றபோது, பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் அவரை விரட்டி அடித்தோம் எனவும், இதனால் தான் மட்டக்களப்பில் தொல்பொருள் திணைக்களத்தின் தொல்லைகள் குறைவாக உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் மட்டக்களப்பின் சில இடங்களில் தொல்லைகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஜனாதிபதி இதுவரைக்கும் விதுர விக்ரமநாயக்கவை ஏன் கண்டிக்கவில்லை? உண்மையைச் சொன்னனால் அவரைப் பதவியில் இருந்து விலக்க வேண்டும். ஏனெனில் அவரே தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு ஆலோசனையையும் நிதியையும் வழங்கினார். அத்துடன் இராணுவத் தலையீட்டுடன் இந்த விடயங்களையும் நேரடியாகச் செய்தார்.

அந்த இடத்தில் பணிப்பாளரிடம் ராஜினாமாக் கடிதத்தினைத் தாருங்கள், என கேட்டது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாக இருப்பினும் அதற்கு மூல காரணம் விதுர விக்ரமநாயக்கவே!

இன்று இதையடுத்து பலர் ஜனாதிபதி ஆக்கபூர்வமான முடிவினை எடுத்துள்ளதாகக் கூறியுள்ளனர். ஆனால், இன்னும் அந்த அமைச்சர் பதவியிலேயே உள்ளார். நாளை ஜனாதிபதி இல்லாது போனால் அமைச்சர் புதிய



பணிப்பாளரை வைத்து அனைத்தையும் நடத்துவார். ஆகவே, நிரந்தரத் தீர்வு கிடைக்கப்பெறும் வரையில் எந்தவொரு விடயத்தினையும் பார்த்து நாம் திருப்தி அடைய முடியாது.

இது, எதிர்வரும் காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் வருமாயின் அதில் மக்களின் ஆதரவினை பெறுவதற்காக எடுக்கப்பட்டுள்ள முயற்சியேயாகும். மாறாக உண்மையாகவே இதற்கு அவர் தீர்வு எடுப்பதாயின் இனவாதியான விதுர விக்ரமநாயக்கவை பதவியில் இருந்து நீக்கி இருக்க வேண்டும்.

அவர் செருப்புப் போடாமல் இருப்பதால் மட்டும் புண்ணியவான் ஆகிடவோ அல்லது நல்வர் ஆகிடவோ முடியாது.

தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்து, அவர்களின் காணியைப் பறிப்பது, சிவன் ஆலயத்தை உடைத்தெறிந்து விட்டு அதில் இன்னொரு மத ஆலயத்தை அமைப்பது போன்ற குற்றங்கள் கடவுளுக்கே பொறுக்காது, எனவும் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

## க.பொ.த உயர்தரப் பரீட்சை வெளியான விசேட அறிவிப்பு!

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையினை முன்பு போன்று குறிப்பிட்ட ஏதேனும் ஒரு மாதத்தில் நடத்துவது குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி காரியாலயத்தில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். உயர்தரப் பரீட்சை நடத்துவதற்காக சட்ட ரீதியாக ஒரு மாதத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை நடத்துவது குறித்து நாடாளுமன்றிற்கு அறிவித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதி விசேட சந்தர்ப்பங்களைத் தவிர வேறு எந்த சந்தர்ப்பத்திற்காகவும் பரீட்சை மாதத்தை மாற்றாதிருப்பதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக் கடற்படை அதிகாரி கப்பலில் தூக்கிட்டு தற்கொலை!

இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கப்பலான விஜயபாகுவில் கடமையாற்றிவந்த அதிகாரி ஒருவர், அதே கப்பலில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் குறித்த கப்பல் தரிந்திருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக துறைமுக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் 44 வயதுடைய கொமாண்டோ தர அதிகாரி ஒருவரென என தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த அதிகாரி உயிரை மாய்த்தமைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், துறைமுக காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி! ருவான் விஜயவர்தன குற்றச்சாட்டு

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில குழுக்கள் முயல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார். நாடு வங்குரோத்து அடைந்திருந்த வேளையில் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ச, எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் இராணு வத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு பிரதமர் பதவியை வழங்க முன்வந்தார்.

ஆனால், அனைவரும் அதனை ஏற்க மறுத்திருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அதனை ஏற்றுக்கொண்டு நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளார். எனினும், தற்போது எதிர்க்கட்சி உட்பட சில குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கின்றன, என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

திங்கட்கிழமை ஆரம்பமாகும் இந்தக் கூட்டத்தொடர் ஜூலை மாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ஜெனிவா நேரப்படி, பி.ப 3.00 மணிக்கு இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமை கள் உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூல உரை இடம்பெறவுள்ளது.

இதன்போது, 'இலங்கையில் நல்லி ணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற 51/1 தீர்மானத்தின் பிரகாரம், நாட்டின் நல்லி ணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகா ரத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங் கள் குறித்தும், பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழல் மோசடிகள் என்பன மனித உரிமைகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக் கங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கோப்பையில் இருந்து விலகினார் நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் பிரேஸ்வெல்

ஐ.சி.சி. 50 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரும் ஒக்டோபர் முதல் வாரத்தில் இந்தியாவில் தொடங்குகிறது. இந்நிலையில் இந்தத் தொடரில் இருந்து நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான மைக்கேல் பிரேஸ்வெல் விலகி உள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெற்ற தொழில்முறை ரி-20 கிரிக்கெட் போட்டியில் பங்கேற்ற போது பிரேஸ்வெல்லுக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது. குதிகால் தசைநாரில் ஏற்பட்டுள்ள காயத்துக்காக பிரேஸ்வெல் அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளார். அறுவை சிகிச்சைக்குப் பின்னர் விளையாடுவதற்கான உடற்தகுதியை எட்டுவதற்கு 6 முதல் 8 மாதங்கள் ஆகும் என்பதால் உலகக்கோப்பை தொடரில் இருந்து பிரேஸ்வெல் விலகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் ஐபிஎல் தொடரின் தொடக்க ஆட்டத்தில் பங்கேற்ற போது நியூஸிலாந்து அணியின் கப்டன் கேன் வில்லியம்சனுக்கு வலது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் வில்லியம்சன் தொடரில் இருந்துவிலகினார். அதனைத் தொடர்ந்து காயத்துக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்ட அவரும் உலகக் கிண்ணத் தொடரில் கலந்துகொள்வது சந்தேகம் என்றே கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது பிரேஸ்வெல் காயம்



காரணமாக விலகி உள்ளது நியூஸிலாந்து அணிக்கு பின்னடைவை கொடுத்துள்ளது. கடந்த ஆண்டு நியூஸிலாந்து அணியில் அறிமுகமான சகலதுறை வீரரான பிரேஸ்வெல் 19 ஒருநாள் போட்டி, 16 ரி-20, 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளார்.

32 வயதான பிரேஸ்வெல் கடந்த ஆண்டு இந்திய சுற்றுப்பயணத்தின் போது நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் 78 பந்துகளில் 140 ஓட்டங்களை விளாசி மிரட்டியிருந்தார். இந்த ஆண்டு ஐபிஎல் தொடரில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காகவும் அவர் களமிறங்கியிருந்தார்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## யாழ் ஊர்காவற்றுறையில் 22 பவுண் நகை கொள்ளை

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நயினாதீவு பகுதியில் 36 இலட்சம் ரூபாய் பெறுமதியான 22 பவுண் நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

நயினாதிவு ஐந்தாம் வட்டார பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, இரண்டு பெண்கள் வசித்துவரும் வீட்டில் அவர்கள் உறக்கத்தில் இருந்த போது வீட்டுக் கூரையை உடைத்து வீட்டில் இறங்கிய திருடர்கள் கைப்பையில் வைக்கப்பட்டிருந்த 22 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

காலை அறையைத் திறந்து பார்த்தபோது நகைகள் கைப்பையுடன் கொள்ளையடிக்கப்பட்டமை தெரிய வந்தநிலையில் ஊர்காவற்றுறை பொலிசாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கிளிநொச்சி தர்மபுரத்தில் நோய்ப் பாதிப்பு தென்னை பயிர்ச்செய்கைச் சபையினர் ஆய்வு

தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் தெங்கு பாதிப்பு தொடர்பில் கள ஆய்வு ஒன்றை இன்று மேற்கொண்டார்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் தெங்குச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டு வரும் நிலை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக அப்பகுதிக்கு இன்றைய தினம் ஆய்வுக் குழு விஜயம் மேற்கொண்டிருந்தது.

பாதிப்புக்குள்ளாயவையாக அடையாளப்படுத்தப்பட்ட தென்னைகளை அவர்கள் பார்வையிட்டதுடன், அதற்கான தீர்வு தொடர்பில் தமது கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் தேவராஜா இதன் போது ஊடகங்களிற்கு தகவல் வழங்குகையில், குறித்த பகுதியில் ஒருவகையான நோய்த் தாக்கம் ஏற்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளதாகவும், அதற்கு முறையான பசளையிட்டு நீர்பாச்சுதல் அவசியமானது, எனவும் குறிப்பிட்டார்.

தென்னம்பிள்ளைகளின் பச்சையங்களை வெள்ளைப் பூச்சிகள் உறிஞ்சுவதாகவும், அதனால் இவ்வாறான தாக்கம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அவற்றை கட்டுப்படுத்த முடியும் எனவும், இதன் தாக்கத்தினால் தெங்கு உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

குறித்த நோய்த் தாக்கம் தொடர்பாக தர்மபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெங்கு உற்பத்தியில் ஈடுபடும் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

## யாழ் மாநகரசபையின் நடமாடும் சேவை சனிக்கிழமை நீராவியடியில் நடைபெறும்

யாழ் மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடமாடும் சேவை நடைபெறவுள்ளதாக யாழ் மாநகர சபை ஆணையாளரால் சுற்றுநிருபம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு, எட்டாம் ஒன்பதாம் வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்கப்படவுள்ளது.

அத்துடன், பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, போன்றவற்றைப் பெற்று யாழ் மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாகச் செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5 சதவீதக் கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியுமென் றும் அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மஹர சிறைக் கலவரக் குற்றவாளிகளை கைதுசெய்ய உத்தரவிடுமாறு கோரிக்கை



மஹர சிறைச்சாலையில் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்ய உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மோதலின்போது உயிரிழந்த கைதி ஒருவரின் மனைவியான எம்.ஜி.லசந்தி என்பவரால் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலையில் உள்ள கைதிகள் கொவிட்-19 நோய்த் தொற்றுகளின் அதிகரிப்புக் காரணமாக , முன்கூட்டியே பிணையில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் சிறந்த வசதிகளைக் கோரியும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

அதன் போது ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது எட்டுக் கைதிகள் கொல்லப்பட்டதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர் என்பதும் குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலையில் மாணிக்கவாசகத்தின் நூல்

மறைந்த பிரபல ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய "நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்" என்ற நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் மாணவர்களுக்கான ஓர் உசாத்துணை நூலாக இணைக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு அதற்கான அறிமுக விழா நேற்று புதன்கிழமை கலையக கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. ஊடகத்துறை விரிவுரையாளர் தினேஷ் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், அரசியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், ஊடகவியலாளர்களான கணபதி சர்வானந்தா, பாரதி ஆகியோர் இங்கு உரையாற்றினார்கள்.

ஏற்புரை நிகழ்த்திய திருமதி மாணிக்கவாசகம் நூல்களின் ஒரு தொகுதியை பல்கலைக்கழக நூலகத்துக்கு வழங்கினார்.



பெருந்தொகையான மாணவர்களும், விரிவுரையாளர்களும், எழுத்தாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள்.

## புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 15 ஆம் திகதி

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி நடைபெறும்.

இந்தத் தகவலை பரீட்சைகள் திணைக்களம் இன்று அறிவித்துள்ளது.

இன்று முதல் ஜூலை 06 ஆம் திகதி வரை பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளில் இருந்து கோரப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## பிரான்ஸ் உச்சிமாநாட்டில் உரை ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெறவிருக்கும் உயர்மட்டக் குழுக் கலந்துரையாடலில் உரையாற்றுமாறு, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய நிதி ஒப்பந்தத்திற்கான உலகளாவிய தலைவர்களின் உச்சி மாநாடு இம்மாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடைபெற உள்ளது.

புதிய உலகளாவிய நிதிக்கான உச்சிமாநாடு, ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்துப் போராடுவதையும், காலநிலை மாற்றத்திற்கு நிதியளிப்பதையும், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதையும், நாடுகளை நெருக்கமாகக் கொண்டு வருவதையும், மற்றும் சர்வதேச நிதி அமைப்புக்கான புதிய ஒருமித்த கருத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நிகழ்வில் மாநில மற்றும் அரசாங்கத் தலைவர்கள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள், நிதி மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த நிபுணர்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு நினைவிட ஆரம்பம்



*கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்தும் முகமாக நூற்றாண்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.*

*இதற்கான அத்திவாரமிடும் நிகழ்வு, கலாசாலையின் அதிபர் தலைமையில் இன்று காலை 9.30 க்கு இடம்பெற்றது.*

*கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுனருமாகிய சுவர்ணா நவரத்தினம் அவர்கள் நினைவிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.*

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# அடுத்த ஆண்டு ஆஸ்கர் விருது செந்தில் பாலாஜிக்குத்தான்!

## அ.தி.மு.க. ஜெயக்குமார் பேட்டி



அடுத்த ஆண்டு ஆஸ்கர் விருது கொடுக்க வேண்டும் என்றால் அதை அமைச்சர் செந்தில் பாலாஜிக்குத்தான் கொடுக்க வேண்டும், என சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி மீது புகார் வந்தவுடன், அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கியவர் ஜெயலலிதா. குற்றச்சாட்டு இருந்த நிலையில், செந்தில் பாலாஜிக்கு அமைச்சர் பதவி கொடுத்து அழகு பார்த்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

30 வீத இதய அடைப்புக்கு ஆஞ்சியோகிராம் செய்தது உலகிலேயே இங்கேதான். இன்றைக்குத் தவறு செய்தவர்கள் நாளை தண்டிக்கப்படுவார்கள். அடுத்த ஆண்டு ஆஸ்கர் விருது கொடுக்க வேண்டும் என்றால் அதை அமைச்சர் செந்தில் பாலாஜிக்குத்தான் கொடுக்க வேண்டும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு புழல் சிறைக் கைதிப் பதிவு எண்



தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி இந்திய மத்திய அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டவேளையில், நெஞ்சு வலி ஏற்பட்டதன் காரணமாக சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கு நீதிமன்றக் காவல் வழங்கப்பட்டுள்ளதால் அவருக்கான பாதுகாப்புப் பொறுப்பை நேற்றிரவு 10 மணியளவில் சிறைத்துறை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர்.

சிறைத்துறையில் பணியாற்றும் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் உள்பட 10 பொலிசார் செந்தில் பாலாஜி சிகிச்சை பெறும் வார்ட்டின் முன்பு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். துணை ராணுவத்தினரின் பாதுகாப்பு உடனடியாக வாபஸ் பெறப்பட்டது.

இந்த நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு புழல் சிறைக் கைதிக்கான பதிவு எண் வழங்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் எண் நடைமுறையும், சிறை கைதிக்கு உள்ள விதிமுறைகளும் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கும் பொருந்தும் என்றும், அமைச்சர் செந்தில் பாலாஜியைச் சந்திப்பதற்கு வருபவர்கள் புழல் சிறைத்துறை அதிகாரிகளின் ஒப்புதலோடு அனுமதிக்கப்படுவார்கள், என்றும் தமிழக சிறைத் துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 61 நாள் மீன்பிடி தடைகாலம் நிறைவடைந்தது ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள்



மீனவர்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டும் கடலில் மீன் வளத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும், சென்னை காசிமேடு முதல் கன்னியாகுமரி வரை மீன்பிடித் தடைக்காலம் ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரை 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டது.

இந்த மீன்பிடித் தடைக்காலத்தில் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழில் செய்யும் விசைப்படகுகள், இழுவைப் படகுகள் ஆகியவை மீன்பிடிக்கக் கடலுக்கு செல்ல அனுமதிக்கப் படவில்லை. அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட எல்லை வரை சிறிய வகைப்படகுகள் மூலம் மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வந்தனர்.

இந்தநிலையில் மீன்பிடித் தடைக் காலம் 14 ஆம் திகதி நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தது. இதன் காரணமாக தமிழக மீனவர்கள் தங்கள் படகுகளுக்குப் பூசை செய்து மீண்டும் மீன்பிடிக்க உற்சாகமாகக் கடலுக்குச் சென்றனர்.

# இந்தியா மணிப்பூரில் தொடரும் கலவரம் - 11 பேர் பலி!

இந்திய மாநிலம் மணிப்பூரில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கலவரத்தில் மேலும் 11 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மே மாதம் அரசு வேலை மற்றும் கல்வி இட ஒதுக்கீடு தொடர்பில் மணிப்பூரில் குக்கி மற்றும் மெய்தீஸ் ஆகிய இரு இனக்குழுக்களுக்கு இடையே மோதல் வெடித்தது. இந்த மோதல் கலவரமாக மாறியதைத் தொடர்ந்து மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக அமைதியின்மை நிலவுகிறது.

இந்நிலையில் இம்பாலின் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காமன்லோக் பகுதியில் நேற்றிரவு தாக்குதல் நடந்துள்ளது. இதில் கிராம மக்கள் 11 பேர் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

காயமடைந்த பலர் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் காயமடைந் தவர்களில் பலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் பலி எணணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகின்றன.



# ஒடிசா ரயில் விபத்து சம்பவம்

## உதவி ஸ்டேஷன் மாஸ்டர் உட்பட மூவரைக் கைது செய்தது சிபிஐ

ஒடிசா ரயில் விபத்துத் தொடர்பாக பஹானகா உதவி ஸ்டேஷன் மாஸ்டர் உள்பட 5 பேரிடம் சிபிஐயினர் தீவிர விசாரணை மேற்கொண்டிருந்தனர். இதையடுத்து, உதவி ஸ்டேஷன் மாஸ்டர் உட்பட 3 பேரை சிபிஐ அதிகாரிகள் கைது செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒடிசா மாநிலத்தின் பாலசோரில் சமீபத்தில் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் உட்பட மூன்று ரயில்கள் விபத்துக்குள்ளாகியிருந்தன. இதில் 288 பேர் பலியாகினர். இதற்குக் காரணமாக ஏதேனும் சதித் திட்டம் இருந்திருக்குமா? என்பது குறித்து சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. ரயில்வே பாதுகாப்பு ஆணையரும் தனியாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

தானியங்கி சமிக்ஞைப் பொறிமுறை செயல்படாதவாறு, அதன் மென்பொருளில் குளறுபடி ஏற்படுத்தப்பட்டதாகவும், இதனால், ஊழியர்கள் வாயிலாகவே சமிக்ஞைப் பொறிமுறை செயல்படுத்தப் பட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்தது.

இந்த நிலையில், ஒடிசா ரயில் விபத்துத் தொடர்பாக உதவி ஸ்டேஷன் மாஸ்டர் உட்பட ஐவரிடம் விசாரணை நடத்திய பின்னர், உதவி ஸ்டேஷன் மாஸ்டர் மற்றும் சமிக்ஞைப் பொறியாளர் உள்பட மூவரை சிபிஐ அதிகாரிகள் கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# விண்வெளி நிலையத்தில் பூத்த பூ புகைப்படத்தை வெளியிட்டது நாசா




அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் அண்மையில் வெளியிட்ட பதிவு ஒன்றில், விண்வெளியில் பூத்த “ஸின்னியா” பூவின் புகைப்படத்தைப் பகிர்ந்திருந்தது. இந்தப் பூச்செடி சர்வதேச விண்வெளி நிலையத்தில் வைத்து வளர்க்கப்பட்டதாக நாசா தெரிவித்துள்ளது.

விண்வெளியில் செடிகளை வளர்ப்பது தொடர்பாக 1970 களில் இருந்தே விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். தற்போது நாசா வெளியிட்டுள்ள புகைப்படத்தில் இருக்கும் பூச்செடியை 2015 ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் ஜெல் லிண்ட்கிரென் வளர்க்கத் தொடங்கியுள்ளார். விண்வெளி ஆய்வின் ஒரு பகுதியாக இந்தச் செடி வளர்ப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது.

பூமியின் சுற்றுப்பாதையில் தாவரங்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதை ஆய்வு செய்வதன் மூலம், விண்வெளியில் பயிர்களை எவ்வாறு வளர்ப்பது என்பதைப் புரிந்துகொள்ள முடியும் என்றும், நீண்ட கால விண்வெளிப் பயணங்களில் புதிய உணவு ஆதாரங்களை உருவாக்க முடியும் என்றும் நாசா கூறியுள்ளது.

நாசா விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் கீரை, தக்காளி, மிளகு போன்றவற்றையும் மற்ற காய்கறிகளுடன் பயிரிட்டுள்ளனர் என்றும், இன்னும் ஏராளமான தாவரங்கள் வளர்க்கப்படும், என்றும் நாசா தெரிவித்துள்ளது.

# ஐயப்பனின் ஆனி மாதப் பூசைக்காக சபரிமலை நடை இன்று திறப்பு



சபரிமலை அய்யப்பன் கோவிலில் ஆனி மாத பூசைக்காக இன்று மாலை 5.30 க்கு நடை திறக்கப்படுகிறது. தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு முன்னிலையில் மேல்சாந்தி ஜெயராமன் நம்பூதிரி நடையைத் திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி தீபாராதனை நடத்துகிறார்.

இதனைத் தொடர்ந்து கற்பூர ஆழியில் தீபம் ஏற்றப்படும். அதன் பின்னர் பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு 18 ஆம் படி வழியாக சன்னிதானத்திற்கு அனுமதிக்கப்படவிருக்கிறார்கள்.

நாளை முதல் 20 ஆம் திகதி வரை 5 நாட்கள் கோவிலில் வழக்கமான பூசைகளுடன் சிறப்புப் பூசைகளும் நடைபெறும். இதையடுத்து 20 ஆம் திகதி அத்தாழ பூசைக்குப் பிறகு அரிவராசனம் பாடல் இசைக்கப்பட்டு இரவு 10 மணிக்கு கோவிலில் நடை அடைக்கப்படவுள்ளது.

வழக்கம் போல பக்தர்கள் இணைய முன்பதிவு அடிப்படையில் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இதற்கான முன்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது எனவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

# கென்யாவில் கடவுளைக்காண பட்டினிகிடந்து சாவு மதபோதகரின் பண்ணையில் 303 சடலங்கள் மீட்பு



கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் மத போதகர் ஒருவரின் பண்ணை நிலத்திலிருந்து பட்டினி கடந்து இறந்துபோனவர்கள் 303 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த பண்ணையில் அமைந்துள்ள தேவாலயதிற்கு வரும் மக்களிடம் பட்டினியாக இருந்தால் இறைவனைச் சந்திக்க முடியும், என குறித்த மத போதகர் பால் மெகன்சி கூறியுள்ளார். இதனால், அங்கு பணியாற்றிய ஊழியர்களும் ஆலயத்திற்கு வந்தவர்களும் உணவின்றிப் பட்டினியால் மெலிந்து இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களை விட பண்ணையில் இருந்த இன்னும் சிலரும் உணவு உண்ணாமல் பட்டினியாயிருந்ததாகவும், அவர்களைத் தேடும் பணியும் இடம் பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

மீட்கப்பட்ட சடலங்கள் அனைத்தும் வெள்ளை நிறப் பிளாஸ்டிக் உறைகளால் மூடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்பது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியூடாக அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## போஸ்னியாவில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய 13 வயதுச் சிறுவன் கைது

வடகிழக்கு போஸ்னியாவில் உள்ள லூகாவாக் நகரில் இயங்கி வரும் ஆரம்பப் பாடசாலை ஒன்றில், ஆசிரியர் மீது 13 வயதுச் சிறுவன் ஒருவன் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சம்பவம் இடம்பெற்ற பாடசாலையின் முன்னாள் மாணவனான குறித்த சிறுவன், அண்மையில்தான் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளான். துப்பாக்கியால் சுடப்பட்டவர் அந்தப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகவும், அதன் துணை முதல்வராகவும் பணிபுரிந்து வருகிறார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிசார், சிறுவனைக் கைது செய்து அவனிடம் இருந்த துப்பாக்கியையும் பறிமுதல் செய்துள்ளனர். பலத்த காயமடைந்த ஆசிரியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியருக்கு கழுத்துக்கு அருகே துப்பாக்கிச் சூட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அவருடைய உடல்நிலை சீராக உள்ளது என மருத்துவமனைத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. சிறுவனைக் கைது செய்த பொலிசார் லூகாவாக் காவல் துறையின் வளாகத்தில் தமது கண்காணிப்பில் வைத்து அவனை விசாரித்து வருகின்றனர். தென்கிழக்கு ஐரோப்பாவின் பால்கன் தீபகற்பத்தில் போஸ்னியா நாடு அமைந்துள்ளது. இங்கு 1990 களில் ஏற்பட்ட மோசமான போருக்குப் பிறகு, தனிப்பட்ட முறையில் துப்பாக்கி வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதன் காரணமாக போஸ்னியாவில் பல்வேறு துப்பாக்கி வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறிவருகின்றன.



## புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளாகி 79 பேர் உயிரிழப்பு

இத்தாலிக்கு அகதிகளையும் புகலிடக் கோரிக்கையாளர்களையும் ஏற்றிச் சென்ற மீன்பிடிப் படகு ஒன்று கிரீஸ் நாட்டுக்கு அருகில் கடலில் கவிழ்ந்ததில் விபத்து ஏற்பட்டுள்ளது.

மத்தியதரைக் கடலில் ஏற்பட்ட மோசமான இந்த விபத்தில் குறைந்தபட்சம் 79 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிகவும் ஆழமான கடற்பகுதிக்கு அருகே, நேற்று அதிகாலையில் குறித்த கப்பல் கவிழ்ந்திருந்தது. அதையடுத்து, கிரீசின் கடலோரக் காவல்படை, கடற்படை மற்றும் வணிகக் கப்பல்கயோடு விமானங்களும் பரந்த தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையை ஆரம்பித்திருந்தன. அப்பகுதியில் வீசும் கடும் காற்றுக் காரமாக மீட்புப் பணிகள் கடும் சிரமத்துக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 104 பேர் காப்பாற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறித்த படகில் 400 பேர் வரை இருந்ததாக முதற்கட்ட விசாரணையின் மூலம் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ரகசிய ஆவணங்களைப் பதுக்கிய வழக்கு ட்ரம்ப் கைதாகி ஜாமீனில் விடுவிப்பு



அமெரிக்காவில் கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவியிருந்தார். அதனைத் தொடர்ந்து டிரம்ப் தனது குடும்பத்துடன் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறி புளோரிடாவில் உள்ள தனது கடற்கரை வீட்டில் குடியேறினார்.

நீதித்துறை விசாரணை அமெரிக்கச் சட்டத்தின்படி ஜனாதிபதிகள் தங்களின் பதவிக்காலம் முடிந்ததும் தாங்கள் கையாண்ட அனைத்து ஆவணங்களையும் ஆவணக் காப்பகத்-திடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், ட்ரம்ப் அதைச் செய்யாமல் நூற்றுக்கணக்கான ரகசிய ஆவணங்களைத் தன்னுடன் எடுத்து சென்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. ட்ரம்ப் இதைத் திட்டவட்டமாக மறுத்தபோதும் அமெரிக்க நீதித்துறை இது குறித்து விசாரணையை தொடங்கியது.

அதன் ஒரு பகுதியாக, கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் புளோரிடாவில் உள்ள ட்ரம்பின் கடற்கரை வீட்டில் மத்திய புலனாய்வுப் பொலிசார் அதிரடிச் சோதனை நடத்தினர். அப்போது ட்ரம்ப் வீட்டின் குளியலறையில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனாலும், இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என தற்போதைய ஜனாதி-தி ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க அரசை ட்ரம்ப் சாடியிருந்-தார்.

இந்தச் சூழலில் அரசின் ரகசிய ஆவணங்களை எடுத்துச் சென்ற வழக்கில் கடந்த வாரம் புளோரிடாவில் உள்ள மியாமி நகர நீதிமன்றம் டிரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்தது. சட்டவிரோதமாக அரசு ரகசியங்களை எடுத்துச் சென்றுவிட்டு, அவற்றை அரசு மீண்டும் திரும்பப் பெறமுடியாத அளவுக்கு அழித்து விட முயன்றார், என்பது உள்பட ட்ரம்ப் மீது 37 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்த வழக்கில் ட்ரம்ப் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில்நேற்று டிரம்ப் தனது 77 ஆவது பிறந்த நாளில், இரகசிய ஆவணங்கள்தொடர்பான விசாரணைக்காக மியாமி நகர நீதிமன்றில் ஆஜரானார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு நபரான ட்ரம்பின் முன்னாள் உதவியாளர் வால்ட் நவுடாவும் ஆஜராகியிருந்தார். அவர்கள் இருவரையும் மியாமி நகர பொலிசார் கைது செய்தனர். அவர்களது கைரேகைகள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்பட்டன. அதே சமயம் ட்ரம்ப் வகித்த உயர் பதவியைக் கருத்தில் கொண்டு அவருக்குக் கைவிலங்கு பூட்டப்படவில்லை.

தொடர்ந்து நடந்த விசாரணையின் போது ட்ரம்ப் தன் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ஏற்க மறுத்து, தான் குற்றமற்றவர் என வாதிட்டார். இதையடுத்து அரசுத் தரப்பின் வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி, ட்ரம்ப் மற்றும் வால்ட் நவுடா ஆகிய இருவருக்கும் எந்தவித நிபந்தனையும் இன்றி ஜாமீன் வழங்கி விடுவித்தார்.

ட்ரம்ப்தனது முன்னாள் உதவியாளர்வால்ட்நவுடாவிடம் இந்த வழக்குக் குறித்து நேரடியாக ஆலோசனை நடத்தத் தடை விதித்த நீதிபதி, விசாரணையை ஒத்தி வைத்து உத்தரவிட்டார். முன்னதாக ஆபாசப் பட நடிகை ஸ்டார்மி டேனியல்சுக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலகின் மிகத் துல்லியமான தகவல் ஆதாரமாக டுவிட்டர்



அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு டுவிட்டர் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. உலகப் பணக்காரரான எலன் மஸ்க் இந்த நிறுவ னத்தைக் கடந்த ஆண்டு வாங்கிய பின்பு டுவிட்டரில் பல்வேறு அதிரடி மாற்றங்க ளைச் செய்து வந்தார்.

இதில் தவறான தகவல்களைக் கையாள்வதில் அவர் மேற்கொண்ட அணுகுமுறை கடும் விமர்சனத்துக்குள்ளாகியது. இதனையடுத்து டுவிட்டரின் தலைமை நிர்வாகியாக லிண்டா யாகரினோ என்ற பெண் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், தற்போது லிண்டா யாகரினோ செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் டுவிட்டர் 2.0 வுக்கான திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. டுவிட்டரை உலகின் மிகத்துல்லியமான நிகழ்நேரத் தகவல் ஆதாரமாக மாற்றும் பணியில் தமது நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகவும் அதில் அவர் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2023இல் வெளியிடப்பெற்றது.